தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# ஐ.எப்.ஜி.டி.பி., சார்பில் அதிக மகசூல் தரும் மரக்கன்றுகள்

**கோவை, ஜன. 30–**

வனத்துக்கு வெளியே மரம் வளர்த்தலை மேம்படுத்தும் விதமாக, ஐ.எப்.ஜி.டி.பி., சார்பில் அதிக மகசூல் தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

வனத்துக்கு வெளியில் மரம் வளர்த்தலை ஊக்குவிக்கும் பொருட்டு, அதிக மகசூல் தரக்கூடிய சவுக்கு, யூகலிப்டஸ், மலைவேம்பு, புன்னை, தேக்கு உள்ளிட்ட மரக்கன்றுகளை, ஐ.எப்.ஜி.டி.பி., உருவாக்கியுள்ளது.

சாதாரண மரக்கன்றுகளுடன் ஒப்பிடுகையில் இவை, அதிக உற்பத்தித் திறன் கொண்டவை மற்றும் தேவைக்கும், வழங்கலுக்கும் இடையேயான இடைவெளியை குறைக்கின்றன.

தேசிய வனஆராய்ச்சி திட்டத்தின் கீழ், ஐ.எப்.ஜி.டி.பி., உருவாக்கிய தொழில்நுட்பங்களை விரிவுபடுத்துவதற்கும் பிரபலப்படுத்தவும், சிறந்த நிலையை எட்டவும், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின், கே.வி.கே., நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, ஐ.எப்.ஜி.டி.பி., கடந்தாண்டு ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலுக்கு சொந்தமான இடத்தில், வன உயிரின மையத்தை ஏற்படுத்தியது.

இம்மையத்தில், நான்கு எக்டேர் பரப்பில், சவுக்கு, யூகலிப்டஸ், மலைவேம்பு, புன்னை, தேக்கு உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக, ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் குன்னிக்கண்ணன் உத்தரவுப்படி, புதிதாக கண்டறியப்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், ஐ.எப்.ஜி.டி.பி., விஞ்ஞானிகள், சரவணன், விஜயராகவன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இதன் மூலம் புதிய மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.